# மேகதாது அணை: கர்நாடக அரசின் திட்டத்தை கடுமையாக எதிர்த்தவர் எங்கள் தலைவர்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!...முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு அரசு, மார்ச் 4, 2026 அன்று எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டபடி, மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டம்-1956, பிரிவு 4-ன் கீழ், அந்த அடிப்படையில் புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என ஒன்றிய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது' என்கிற திருத்தத்தைச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**தடுத்து நிறுத்துவோம்!**

கர்நாடகா மேகதாது அணை கட்டுவதைத் தடுக்க, சட்டரீதியாகவும், பிரதமர் மூலமாகவும் இந்த அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாகத் துணை நிற்கும். மேகதாது அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து தடுத்து நிறுத்துவோம் என்று கூறி, இந்தத் தீர்மானத்துக்கு எங்கள் முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

அதே மாதிரி இந்த ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறக்காததால் டெல்டா விவசாயிகள் கஷ்டத்தில் இருக்கிறார்கள். குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து நடக்கவிருக்கின்ற காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் (Cauvery Water Management Authority), இது தொடர்பாக தமிழ்நாடு அரசு நம் தரப்பு நியாயங்களையெல்லாம் எடுத்து வைத்து, நமக்குரிய நீரை விரைவாகப் பெற்றுத் தர வேண்டும் என்று விவசாயிகள் சார்பாக இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, எங்கள் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ஒரு முக்கியமான வேண்டுகோளையும் முதலமைச்சர் அவர்களுக்கு வைக்க விரும்புகிறேன்.

**மிக முக்கியமான தீர்மானம்**

இன்று நாம் நிறைவேற்றுகின்ற இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம். இந்த தீர்மானத்தைக் கடிதம் மூலமாக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைப்பதற்குப் பதிலாக, தமிழ்நாட்டின் அனைத்து சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு குழுவாகச் சென்று, ஒன்றிய அரசிடம் கொடுத்து நம் ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. அரசியல் வேறுபாடுகளைக் கடந்து செயல்பட இந்த அரசும் முன்வர வேண்டும் என்று எங்கள் தலைவரின் சார்பில் கேட்டுக்கொண்டு, தீர்மானத்தை முழுமனதாக ஆதரித்து அமைகிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்த "நான் முதல்வன்" திட்ட மாணவிகள்!

சென்னை, ஜூன் 20-

'நான் முதல்வன்' திட்டத்தின் பெயரை மாற்றலாம் நோக்கத்தை மாற்ற முடியாது தமிழ்நாட்டை மு.க.ஸ்டாலின் தான் ஆள்கிறார் என்பதற்கு இதுவும் சான்று.

ஏழை, எளிய மாணவிகளுக்கு "நான் முதல்வன் திட்டம் ஒரு வரப்பிரசாதம்.

தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்திய பெண்களுக்கான திட்டங்கள் அளப்பரியது என்றும்

"நான் முதல்வன் திட்டத்தின் பெயரை மாற்றலாமே தவிர, தி.மு.க. தலைவர் கொண்டு வந்த தொலைநோக்கு திட்டங்களை ஒரு போதும் மாற்ற முடியாது என, நான் முதல்வன் திட்டம் மூலம் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வரும் மாணவிகள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நான் முதல்வன் திட்டம் மூலம் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வரும் மாணவிகள் சந்தித்து, நன்றி கூறி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மாணவிகள், அரசுப் பள்ளியில் படித்து, கிராமத்திலிருந்து சென்னையை நோக்கி வந்து கல்லூரி பயின்ற தங்களைப் போன்ற ஏழை எளிய குடும்ப மாணவிகளுக்கு, நான் முதல்வன் திட்டம் ஒரு வரப் பிரசாதம் என்றும், அந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஊக்கத் தொகையால், போட்டித் தேர்வுக்கு தயாராகி வருகிறோம் எனவும் மாணவிகள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# 'சொல் புதிது' திட்டத்தின் 14வது கூட்டம்!

## முனைவர் ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 20-

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் "சொல் புதிது" எனும் திட்டத்தின் பதினான்காவது கூட்டம், தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம . இ ரா சே ந் தி ர ன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பேராசிரியர்கள் உலகநாயகி பழனி, மு. இராமசுவாமி, ஒப்பிலா மதிவாணன், நா. சந்திரசேகரன், ம.இளங்கோவன், தி. கமலி, சிவ முருகேசன், ஊடகவியலாளர்கள் திருப்பூர் கிருஷ்ணன், மு. முருகேசன், நீச்சல்காரன் இராஜாராமன், நீரை மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்வரும் 22 சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

பிற மொழிச் சொல் - தமிழ்ச் சொல் வருமாறு:-

Vegetarian Hotel காய்கறி உணவகம், Non Vegetarian Hotel – மீன் கறி உணவகம், Bike Ride - உந்துருளிப் பயணம், Bike Tour - உந்துருளி உலா, Bike Taxi – வாடகை உந்துருளி, Hand Band - கைப்பட்ட, Community Villa Plot - சமூகச் சீர் மனை, Delimitation - மறு வரையறை, Digital Hub - மின்னணு இணைய மையம், Prebiotic -நன்னுயிரூட்டி, Probiotic - நல நுண்ணுயிரி, Review of Related Literature - முன் ஆய்வுப் பார்வை, Sense of Serenity - ஆழ் மன அமைதி, Unique Payment Interface (UPI) - தனித்த பணம் வழங்கிடை முகம் (த.ப.மு), Peri Urban – புறநகர், Stand up Comedy - தனிநபர் நகைச்சுவை, Black Comedy -கருங்கூத்து நகை, Sketch Comedy - சித்திரக் குறுநகை, Surreal Comedy - இயல் மிகை நகை, Cringe Comedy -கடி நகை, Prebiotic Atmosphere – உயிர் முன் வளிமண்டலம், Pub - மயக்க மையம் ஆகிய சொற்கள் இறுதி செய்யப் பட்டன.

# அரசு ஊழியர்களை வஞ்சிக்கிறது த.வெ.க. அரசு!

## ஆசிரியர் சங்கங்கள் கண்டனம்!

சென்னை, ஜூன் 20-

தி.மு.க. அரசு கொண்டு வந்த TAPS திட்டத்தை முழுமையாக செயல்படுத்துக என தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையில் த.வெ.க. அரசு விளையாட வேண்டாம் என தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தலைவர் கு.தியாகராஜன், திமுக அரசு கொண்டு வந்த TAPS திட்டத்தை முழுமையாக செயல்படுத்திட வேண்டும் என வலியுறுத்தினார். இடைக்கால ஓய்வூதிய திட்டம் என்பது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை வஞ்சிக்கும் செயல் என்றும், ஓய்வூதியம் தொடர்பான தவெக அரசின் புதிய அரசாணை TAPS திட்டத்தை முடக்கும் செயலாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையில் தவெக அரசு விளையாட வேண்டாம் என்றும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தலைவர் கு.தியாகராஜன் எச்சரித்துள்ளார். த.வெ.க. அரசின் இடைக்கால ஓய்வூதியம் என்பது அரசு ஊழியர்களை ஏமாற்றும் செயல் என்றும், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தலைவர் கு.தியாக ராஜன் புகார் கூறியுள்ளார்.

## த.வெ.க. எம்.எல்.ஏ. இவருதான்... ஆனா... டப்பிங் பண்ணாம அவருக்கு பேசவே தெரியாது... 'வைரலாகும் வீடியோ'

# கேமரா முன் வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக் கொடுக்கும் நிர்வாகி!

சேலம், ஜூன் 20-

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 233 தொகுதிகளில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இதில் அவர்கள் 108 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். இப்படி வெற்றி பெற்றவர்களில் பெரும்பாலானவர்களை, தங்கள் தொகுதி எம்.எல்.ஏ. என்று மக்களுக்கு தெரியாத நிலையே உள்ளது. அதே நேரத்தில் அவர்கள் அடிக்கும் லூட்டிகளும், ரீல்ஸ் எடுப்பதற்காக செய்யும் சேட்டைகளும் தினமும் சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது. ஒரு சிலரின் நடவடிக்கைகள் பெரும் சர்ச்சையையும் கிளப்பி வருகிறது. இந்தவகையில் பென்னாகரம் தொகுதி எம்.எல்.ஏ., தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு பேட்டி அளித்தது தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று தற்போது எம்.எல்.ஏ. வாக இருப்பவர் கஜேந்திரன். இவர் தன்னை வேட்பாளராக அறிவித்தவுடன் ஊடகங்களுக்கு பேட்டி அளித்துள்ளார். இது தற்போது வைரலாகி வருகிறது. இதில் என்ன வியப்பு என்றால் அங்கு தான் இருக்கிறது ட்விஸ்ட். அதாவது எப்படி ஊடகங்களிடம் பேசவேண்டும் என்று வார்த்தைக்கு வார்த்தை கட்சி நிர்வாகி ஒருவர் சொல்லிக் கொடுக்கிறார். அவர் சொல்வதை அப்படியே கிளிப்பிள்ளை போல் சொல்கிறார் தற்போதைய எம்.எல்.ஏ. கஜேந்திரன். இப்படி அவர் சொல்லி கொடுப்பதை கூட தட்டுத்தடுமாறி, திக்கித்திணறி பேசுவது கூடுதல் ட்விஸ்ட்.

இந்த வகையில், "என் பெயர் கஜேந்திரன். பென்னாகரம் சட்டமன்றத் தொகுதிக்கு புதுசு வேட்பாளராக வந்திருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் தளபதி அலை வீசுகிறது. 234 தொகுதியிலும் தளபதி வெற்றி பெறுவார். பென்னாகரம் தொகுதியை பொறுத்தவரை கட்சிக்காரர்கள் குழம்பி இருக்கிறார்கள். மற்ற கட்சிகாரர்கள் குழம்பி இருக்கிறார்கள். வேட்பாளர்கள் குழம்பி போய் இருக்கிறார்கள். ஆனால் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். விசிலுக்கு கண்டிப்பாக ஓட்டு போட்டு, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைப்பார்கள். இங்கு என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்து எடுப்பார்கள்," என்று பக்கத்தில் இருப்பவர் சொல்லிக் கொடுத்து பேசுவது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. தான் வேட்பாளர் என்பதையே மற்றவர் சொல்லிக் கொடுத்து சொல்பவர், சட்டமன்றத்தில் தொகுதி மக்களுக்காக சுயமாக என்ன பேசப்போகிறார் என்ற கேள்வியை நெட்டிசன்கள் முன் வைத்து வருகின்றனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி,மேல்மலையனூர் தாலுகா அலுவலகத்தில் விழுப்புரம் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் வளர்மதி,விழுப்புரம் மாவட்ட கலால் உதவி ஆணையர் ராஜி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன்வட்டாட்சியர்கள் செஞ்சி கார்த்திகேயன் மேல்மலையனூர் வேலு,ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# சேலம் - நெல்லையில் 2 மாணவிகளுக்கு பாலியல் தொல்லை!

## த.வெ.க. ஆட்சியில் தொடரும் அவலம்!

ஓமலூர், ஜூன் 20-

சேலம் மாவட்டம் நங்கவள்ளி அருகே பழக்காரனூர் குட்டப்பட்டியை சேர்ந்தவர் பழனிசாமி (26). இவர் மேச்சேரிராசிபுரம் வழித்தடத்தில் இயங்கும் தனியார் பஸ்சில் கண்டக்டராக வேலை பார்த்து வருகிறார். இந்த பஸ்சில் சேலம் தனியார் கண் மருத்துவமனையில் முதலாமாண்டு நர்சிங் படித்து வரும் தாரமங்கலத்தை சேர்ந்த 17 வயது மாணவி ரெகுலராக பயணித்து வந்துள்ளார். அந்த மாணவியிடம் கண்டக்டர் பழனிசாமி நெருக்கமாக பேசி பழகியுள்ளார். இது நாளடைவில் காதலாக மாறியுள்ளது.

இந்நிலையில், கடந்த 15ம் தேதி காலை 6 மணிக்கு சின்னப்பம்பட்டி பஸ் ஸ்டாண்டிற்கு மாணவி வந்துள்ளார். அங்கு வந்த பழனிசாமி, மாணவியை அழைத்துக் கொண்டு அயோத்தியாப்பட்டினத்தை அடுத்த கருமாபுரத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். மறுநாள் அந்த மாணவியை அவரது வீட்டின் அருகே கொண்டு வந்து இறக்கி விட்டுள்ளார். இதையறிந்த பெற்றோர், ஓமலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் செய்தனர். போலீசார் விசாரணை நடத்தி, பழனிசாமி மீது போக்சோ வழக்குப்பதிந்து கைது செய்தனர். பிறகு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லை:**

நெல்லை மணிமூர்த்தீஸ்வரம் பகுதியை சேர்ந்தவர் பெருமாள் (28). பெயின்டர். இவர் நெல்லை பகுதியைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவியை காதலிப்பதாகவும் திருமணம் செய்து கொள்வதாகவும் ஆசை வார்த்தை கூறி 2 நாட்கள் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். மாணவி தகவலின்படி பெற்றோர் டவுன் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். போலீசார் நடத்திய விசாரணையில் பெருமாள் மாணவியை திருமண ஆசை காட்டி பலாத்காரம் செய்தது உறுதியானது. இதையடுத்து போக்சோ வழக்குப்பதிந்து தாழையூத்தியிலுள்ள அவரது உறவினர் வீட்டில் பதுங்கியிருந்த பெருமாளை நேற்று முன்தினம் இரவு போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பாளைமத்திய சிறையில் அடைத்தனர்.

**குமாரபாளையம்:**

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நாராயண நகரில் 70 வயது மூதாட்டி, தனது கணவருடன் வசித்து வந்தார். இந்நிலையில், நேற்று மாலை 4 மணியளவில், மூதாட்டியின் கணவர் அருகில் உள்ள கடைக்கு சென்று விட்டார். மூதாட்டி தனியாக இருப்பதை அறிந்த அதே பகுதியை சேர்ந்த ராஜ்(55) என்பவர், நைசாக வீட்டிற்குள் புகுந்து மூதாட்டிக்கு பாலியல் பலாத்காரம் செய்தார். இதனால் அதிர்ச்சியடைந்த மூதாட்டி சத்தம் போடவே, பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஓடி வந்து, ராஜுவை பிடித்து தர்ம அடி கொடுத்து குமாரபாளையம் போலீசில் ஒப்படைத்தனர். இதில், காயமடைந்த மூதாட்டி, குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலும், ராஜுவை கைது செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர். கடந்த 10 நாளுக்கு முன், ஒரே நாளில் 2 சிறுமிகளிடம், பாலியல் சீண்டலில் ஈடுபட்ட 2 முதியவர்களை போலீசார் கைது செய்த நிலையில், தற்போது மூதாட்டி பலாத்காரம் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் 9 ஆம் ஆண்டு நினைவு நாள்!

சென்னை, ஜூன் 20 -

'அரசு ஆர்ட்ஸ்'சுந்தரேசன் அவர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (19.06.2026 - வெள்ளிக் கிழமை) கடைப் பிடிக்கப்பட்டது.

முரசொலி பொங்கல் மலர் மற்றும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மலர்களை தன் கை வண்ணத்தால் அழகுற வடிவமைத்தவரும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்பை பெற்றவருமான 'அரசு ஆர்ட்ஸ்' நிர்வாக இயக்குநர் 'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் அவர்களின் 9



ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (19.06.2026 – வெள்ளிக்கிழமை) கடைப்பிடிக்கப் பட்டது.

இந்நிகழ்ச்சி 'அரசு ஆர்ட்ஸ்'எண்.78, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை 14, (புதுக்கல்லூரி பின்புறம்) எனும் முகவரியில் நடைபெற்றது.

## உலகக் கோப்பை கால்பந்து: காங்கோ அணிக்காக விளையாடிய

# தமிழ் வம்சாவளி வீரர் சாமுவேல் முத்துசாமி!

*டெக்சாஸ். ஜூன் 20 -*

*நடப்பு ஃபிபா உலகக் கோப்பை கால்பந்து தொடரில் காங்கோ அணிக்காக ஸ்டார்டிங் லெவனில் களம் கண்டிருந்தார் தமிழ் வம்சாவளி வீரரான சாமுவேல் முத்துசாமி.*

*அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள ஹியூஸ்டனில் 'கே' பிரிவில் உள்ள போர்ச்சுகல் மற்றும் காங்கோ அணிகள் இந்த தொடரில் இந்திய நேரப்படி நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு விளையாடின.*

*இந்த ஆட்டத்தில் போர்ச்சுகல் வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த தொடரில் சாம்பியன் படம் வெல்லும் வாய்ப்புள்ள அணிகளில் ஒன்றாக போர்ச்சுகல் இருப்பதாக கால்பந்து ஆர்வலர்கள் கருதுகின்றனர்.*

*இந்த ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் ஜோவா நெவாஸ், போர்ச்சுகல் அணிக்காக முதல் கோலை பதிவு செய்தார். அதற்கான பதில் கோலை முதல் பாதியின் ஸ்டாப்பேஜ் டைமில் காங்கோ அணி பதிவு செய்தது. காங்கோ அணிக்காக விஸ்ஸா அந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.*

*காங்கோ அணிக்காக இந்த ஆட்டத்தின் ஸ்டார்டிங் லெவனில் தமிழ் வம்சாவளியை சேர்ந்த சாமுவேல் முத்துசாமி விளையாடினார்.*

*29 வயதான நடுகள வீரரான சாமுவேல் முத்துசாமி பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் பிறந்தவர். இவரது தாய் காங்கோ நாட்டைச் சேர்ந்தவர். தந்தை கரீபியன் தீவுகளில் ஒன்றான குவாதலூப்பைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளி ஆவார். 19ம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து குவாதலூப்புக்கு இவரது முன்னோர்கள் குடிபெயர்ந்துள்ள னர்.*

*கடந்த 2019 முதல் காங்கோ அணிக்காக சர்வதேச அளவிலான கால்பந்து ஆட்டங்களில் விளையாடி வருகிறார். சுமார் 50க்கும் மேற்பட்ட ஆட்டங்களில் விளையாடிய அனுபவம் கொண்டவர்.*

*கடைசியாக காங்கோ அணி கடந்த 1974 உலகக் கோப்பை தொடரில் பங்கேற்று இருந்தது. அதுதான் அந்த அணியின் முதல் உலகக் கோப்பை தொடர். அதன் பின்னர் சுமார் அரை நூற்றாண்டு காலம் கடந்து நடப்பு உலகக் கோப்பை தொடரில் காங்கோ பங்கேற்றுள்ளது. அதோடு உலகக் கோப்பை வரலாற்றில் காங்கோ அணி முதல் கோலையும் பதிவு செய்தது. அந்த அணியின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆட்டத்தில் சாமுவேல் முத்துசாமி விளையாடினார்.*

*இந்த ஆட்டத்தில் அவருக்கு 5.5 ரேட்டிங் கொடுக்கப்பட்டது.*